# கோணேசர் கல்வெட்டு வெளிப்படுத்தும் திருகோணமலைப் பிராந்தியத்தின் மத்தியகாலப்பண்பாட்டு அம்சங்கள்

திருமதி.துசந்திக்காருதுகோகிலன்[1],திருமதி.நிலாந்தினிசெந்தூரன்[2]

*[1]ஆய்வாளர்,வரலாற்றுத்துறை,கலைகலாசாரபீடம்,கிழக்குப் பல்கலைக்கழகம்,இலங்கை*
*[2]சிரேஷ்டவிரிவுரையாளர்,வரலாற்றுத்துறை,கலைகலாசாரபீடம்,கிழக்குப் பல்கலைக்கழகம்,இலங்கை.*

**ஆய்வுச் சுருக்கம்**

திருகோணமலைப் பிராந்தியத்தின் மத்தியகால வரலாற்றை அறிந்து கொள்வதில் கோணேசர் கல்வெட்டுதனித்துவம் பெறுகின்றது. இப்பிராந்தியத்தின் கலாசாரம், பண்பாடு, வரலாறு, மரபுகள் என்பனகோணேசர் ஆலயத்தை அடியொற்றியேதோற்றம் பெற்றது. கோணேசர் கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டு இப்பிராந்திய வரலாற்றின் பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். இலக்கியச் சான்றானகோணேசர் கல்வெட்டானதுஐதீகங்களுடன் வரலாற்றுத் தகவல்களையும் தன்னகத்தேகொண்டது. இந்நூலில் சொல்லப்படுகின்ற செய்திகள் உண்மைத் தன்மைவாய்ந்தனவா? என்பதனை ஆய்வுவினாவாகக் கொண்டு கிடைக்கின்ற தொல்லியற் சான்றுகளோடு ஒப்பிட்டு, வரலாற்று அணுகு முறையினூடாக ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாககோணேசர் கல்வெட்டையும், கிடைக்கப்பட்ட சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டுகுளக் கோட்டனால் கோணேஸ்வர ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்யப்பட்டதுமுதல் தொழும்பாளர் குடிகளின் வருகை, நியமனம், குடியேற்றம் வரை கூறப்பட்டுள்ளது. இவ்வாய்வினூடாக திருகோணமலைப் பிராந்தியத்தின் பண்பாட்டு அம்சங்கள் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குளக்கோட்டமன்னன் ஆலயத்திற்குச் செய்ததிருப்பணிகள், தொழும்பாளர்களானவன்னிபம், இருபாகை முதன்மை, தானத்தார், வரிபத்தார், கருகுலக்கணக்கன், ஆசாரி, புலவன் போன்ற குடிகளின் வருகை, அவர்களின் குடியேற்றம், வன்னியர்களின் அரசாட்சி, நீதிமுறை, தொழும்பாளர்களுக்கானகடமைகள், நான்குபற்றுக்களின் மக்களுக்கான தொழும்புகள், ஆலய பூசைவிதிமுறை, வழங்கப்பட்டதானங்கள், தொழும்பாளர் குடிகளுக்கானசமூகக் கட்டுப்பாடுகள், தொழும்பாளர்களின் தற்போதையநிலை, தொழும்புகளில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள், மாற்றங்கள், பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றினூடாக திருகோணமலைப் பிராந்தியத்தின் மத்தியகாலபண்பாட்டு அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளன. மேலும் கோணேசர் கல்வெட்டு காட்டும் பண்பாட்டு அம்சங்கள் தொடர்பானமேலதிக தேடலுக்கும் இவ்வாய்வு மிக்கபயனுள்ளதாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** கோணேசர் கல்வெட்டு, குளக்கோட்டன், தொழும்பாளர்கள், மத்தியகாலம், பண்பாடு

## 1.1 ஆய்வு அறிமுகம்

இலங்கை வரலாற்றை அறிய உதவும் மூலங்களில் இலக்கியங்களுக்கு பிரதான இடமுண்டு. இவ்விலக்கியங்களை மையமாகக் கொண்டே ஆரம்பகாலங்களில் இலங்கை வரலாறானது கட்டமைக்கப்பட்டுவந்துள்ளது. பின்னர் பாரம்பரிய வரலாற்று இலக்கியங்களோடு வரலாற்றை அறிய உதவும் தொல்லியல் ஆதாரங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், பூர்வீககுடியிருப்புக்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாறு எழுதும் மரபுவளர்ச்சியடைந்தது. இதனூடாகவரலாற்றில் ஒரு பரிணாமவளர்ச்சியை வரலாற்று இலக்கியங்கள் கொண்டுவந்தன. இவ்வரலாற்று இலக்கியங்கள் ஆரம்பகாலமக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் மூலங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றன.

இலங்கை வரலாறு எழுதப்பட்டகாலத்திலிருந்து தமிழர் வரலாறு பற்றிய ஆய்வுகளில் தமிழ் இலக்கிய மூலங்களும் ஒருமுக்கிய அம்சமாகப் பார்க்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் கிழக்கிலங்கையில் திருகோணமலைப் பிராந்தியத்தின் குறிப்பிட்ட வரலாற்றை அறிந்து கொள்ளகவிராஜவரோதயன் என்பவரால் இயற்றப்பட்டகோணேசர் கல்வெட்டுஎனும் இலக்கியம் பிரதான இடம் வகிக்கின்றது. கோணேசர் கல்வெட்டில்

திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுஅம்சங்களையும்,திருக்கோணேஸ்வரஆலயத்திற்குகுளக்கோட்டமன்னன், கஜபாகுமன்னன் ஆகியோரின் திருப்பணிகள்,குளக்கோட்டனால் திருகோணமலைபிராந்தியத்தில் குடியமர்த்தப்பட்டவன்னிமையின் வரலாறு,வன்னிமைகளுக்குவழங்கப்பட்டஅதிகாரங்கள்,திருகோணமலைப் பிராந்தியசமுதாயவழமைகளையும் பண்பாட்டுவிழுமியங்கள் என்பவற்றைக் கூறுகின்றது. கோணேசர் கல்வெட்டில் திருக்கோணேஸ்வரஆலயத்திற்குவழங்கப்பட்டமானியங்கள்,கோணேஸ்வரஆலயத்தில் தொழும்புசெய்வோருக்குவழங்கப்பட்டமானியங்கள்,கோணேஸ்வரஆலயத்தில் பின்பற்றப்படவேண்டியதொழும்புமுறைகள்,ஆலயத்தில் தொழும்புசெய்வோர் பின்பற்றவேண்டியவிதிமுறைகள் என்பனபற்றி இந்நூல் விரிவாகக்கூறிச் செல்கின்றது. திருகோணமலையினதும் திருக்கோணேஸ்வரஆலயத்தினதும் வரலாற்றுத் தொன்மைக்கானஆதாரங்களில் இந்நூல் முக்கிய இடம் வகிக்கின்றது. அதில் சிலகற்பனையானஅம்சங்களும்,புகழுரைகளும்,பௌராணிகப் பாணியிலானபுனைகதைகளும் காணப்படுகின்றன.

கோணேசர் கல்வெட்டினூடாகதிருகோணமலைப் பிராந்தியத்தில் மத்தியகாலத்தில் வாழ்ந்தமக்களின் சமூகவாழ்வுமற்றும் பொருளாதார,பண்பாட்டுஅம்சங்களைவெளிப்படுத்துவதாக இவ்வாய்வுஅமைகின்றது.

### 1.2 ஆய்வின் நோக்கம்

கோணேசர் கல்வெட்டைஅடிப்படையாகக் கொண்டுதிருகோணமலைப் பிராந்தியத்தின் மத்தியகாலசமூக,பண்பாட்டுஅம்சங்களைஆராய்வது இவ்வாய்வின் பிரதானநோக்கமாகஅமைகின்றது.

### 1.3 ஆய்வுவரையறை

கோணேசர் கல்வெட்டைஅடிப்படையாகக் கொண்டஆய்வாகஅமைவதனால் நூல் எழுதப்பட்டகாலமேஆய்வுவரையறையாகின்றது. குறிப்பாக கி.பி 17ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 19ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டகாலதிருகோணமலைப் பிராந்தியத்தின் பண்பாட்டுஅம்சங்கள் உள்ளடங்குகின்றன. இந்நூலில் கோணேஸ்வரஆலயத்திற்குசெய்யவேண்டியதொழும்புமுறைகள்,ஆலயத்தில் தொழும்புசெய்வோர் பின்பற்றவேண்டியநடைமுறைகள்,தொழும்புசெய்வதற்காகக் குடியமர்த்தப்பட்டமக்களின் சமூகவழமைகள்,சட்டமுறைகள்,மரபுகள்,பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள் பற்றியசமகாலப் பண்பாட்டுஅம்சங்கள் விபரிக்கப்படுகின்றது.

### 1.4 ஆய்வுஅணுகுமுறை

வரலாற்றுஅணுகுமுறையில் மூல இலக்கியப் படைப்புக்களைஆதாரமாகக் கொண்டுஆய்வுமுன்னெடுக்கப்படுகின்றது. ஏனைய சமகால இலக்கியப் படைப்புக்களினூடாகஅரசியல்,பொருளாதார,சமூக,பண்பாட்டம்சங்களைநன்குஅறியமுடிகின்றது. இதனடிப்படையில் கோணேசர் கல்வெட்டுவெளிப்படுத்தும் வரலாற்றுத் தகவல்களினூடாகதிருகோணமலைப் பிராந்தியத்தின் பண்பாட்டுஅம்சங்களைஆய்வுசெய்வதனால் வரலாற்றியல் அணுகுமுறைமுறைபயன்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5 ஆய்வுவினா

கோணேசர் கல்வெட்டுவரலாற்றுச் செய்திகளையும்,புனைகதைகளையும்,மரபுவழியாகவந்தவாய்மொழிச் செய்திகளையும் கலந்துஎழுதப்பட்டமையால் அதனைஒருமுதன்மைவரலாற்றுச் சான்றாகக் கொண்டுதிருகோணமலைப் பிராந்தியமத்தியகாலவரலாற்றின் பண்பாட்டம்சங்களைஅறியலாமா? என்பதுஆய்வுவினாவாகஅமைகின்றது.

## 2.0கோணேசர் கல்வெட்டும் திருகோணமலைப் பிராந்தியபண்பாட்டுஅம்சங்களும்

இலக்கியங்கள் எக்காலப்பகுதியில் தோற்றம் பெற்றனவோஅக்காலத்தில் வாழ்ந்தமக்களின் வாழ்க்கைமுறைகளையும் படம்போட்டுகாட்டுகின்றனவாககாணப்படுகின்றன. அதனடிப்படையில் இலக்கியங்களின் வாயிலாகமக்களின் வாழ்க்கைமுறை,சமயச்சடங்குமுறைகள்,வாழ்க்கைச் சடங்குமுறைகள்,சமுதாயவழமைகள்,நம்பிக்கைகள்,சட்டதிட்டங்கள் போன்றபண்பாட்டுஅம்சங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அந்தஅடிப்படையில் கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில்



© 2025, IRJTSR 

குறிப்பாகதிருகோணமலைப் பிராந்தியத்தின் குறிப்பிட்டவரலாற்றைஅறிந்துகொள்ளகவிராஜவரோதயன் என்பவரால் இயற்றப்பட்டகோணேசர் கல்வெட்டுபிரதான இடம் வகிக்கின்றது. கோணேசர் கல்வெட்டானதுஏட்டுப்பிரதிகளைஆதாரமாகக் கொண்டுவெளியிடப்பட்டது. கோணேசர் கல்வெட்டில்செய்யுள் நடையிலும்,உரைநடையிலும் அமைந்துள்ள இருவேறுபகுதிகளைக் கொண்டுள்ளன. கோணேசர் கல்வெட்டு கூறுகின்றவிடயங்களுக்குஊடாகமுன்புகோணேசர் ஆலயத்தில் நிலவியவழிபாட்டுமுறைகள்,கோயில் தொண்டுகளின் நடைமுறைகள்,கோயிலுக்குரியதொண்டுகள் செய்வோர்,அவர்களுக்குரியகடமைகள்,கோயிலைமையப்படுத்திஇடம்பெற்றகுடியேற்றங்கள் என்பவற்றோடுஅக்காலசமூகஅமைப்பினையும் அறிந்துகொள்ளமுடிகின்றது.

கோணேசர் கோயில் பற்றியஏற்பாடுகளும் சேவைகளும் நிலைகுலைந்திருந்தஒருகாலத்திலேகோணேசர் கல்வெட்டுஉருவாக்கப்பெற்றதுஎன்றுகருதலாம்.மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்பஆலயசேவைகளைப் புதிதாகவரையறைசெய்யவேண்டியஒருகாலத்திலேஅதுஉருவாக்கப்பெற்றதுஎன்றுகொள்ளவேண்டும்.திருகோணமலை யிலிருந்தகோணேசர் கோயிலைப் போர்த்துக்கேயர் இடித்தழித்தபின்பு,கோயிலிலிருந்தஆவணங்கள் பலஅழிவுற்றன.எஞ்சியுள்ளவற்றைஅக்கறையுள்ளசிலர் அங்குமிங்குமாகஎடுத்துச் சென்றனர்.தம்பலகாமத்திலேகோணேசர் கோயிலைபுதிதாகஅமைத்தபோதுபழையகோயிலுக்குரியஉடைமைகளும் சேவைகளும் புதியகோயிலுக்குஉரியனவாகின. அவற்றைப் புதிதாகவரையறைசெய்யவேண்டியதேவையின் நிமித்தமாகவேகோணேசர் கல்வெட்டுஉருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும் (பத்மநாதன், 2003:21).

### 3.0 ஆலயத்தோடுதொடர்பானபண்பாட்டுஅம்சங்கள்

கோணேசர் கல்வெட்டில் குளக்கோட்டமன்னனால் திருக்கோணேஸ்வரஆலயத்திற்கெனவகுக்கப்பட்டதொழும்புகள்,நடைமுறைகள் என்பனபற்றியசெய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தசெய்திகளின் அடிப்படையில் ஆலயத்தோடுதொடர்புடையபூசைநடைமுறைகள்,தொழும்புகள்,தொழும்பாளர்களுக்கானநடைமுறைகள் என்பனபற்றியசெய்திகளின் அடிப்படையில் திருகோணமலைப் பிராந்தியத்தின் பண்பாடுவெளிப்படுத்தப்படுகின்றது.

### 3.1 குளக்கோட்டனும் ஆலயத் திருப்பணிகளும்

குளக்கோட்டமன்னன் திருகோணமலைப் பிராந்தியமக்களின் வரலாற்றுநாயகனாகவிளங்குகின்றான்.இவன் கலிங்கமாகனது இராஜபிரதிநிதியாகஆட்சிபுரிந்துள்ளான்.கோணேசர் கல்வெட்டால் கோணேசர் ஆலயத்திற்குகுளக்கோட்டமன்னன் செய்ததிருப்பணிகளையும்,திருக்கோணேஸ்வரஆலயத்தில் நிகழ்ந்தவழிபாட்டுமுறைகளையும் கோயிலுக்குதொண்டுகள் நடைபெற்றவாற்றறையும்,கோயிலுக்குரியதொண்டுகள் செய்வோரையும்,அவர்களுக்குரியகடமைகளையும்,அக்காலச் சமூகஅமைப்பையும் அறியலாம்.ஆலயத்திற்குரியபணிகளைச் செய்வதற்காககுளக்கோட்டமன்னன் சோழநாட்டிலிருந்துதானத்தார்,வரிபத்தார், இருபாகைமுதன்மை,வன்னிபம் முதலானவர்களைக் கொண்டுவந்துகுடியேற்றியசெய்தியையும் அறியமுடிகின்றது.(கோ.கபாடல் 2).திருகோணமலைப் பிராந்தியத்தின் குடியேற்றங்கள் திருக்கோணேஸ்வரஆலயத்தைமையப்படுத்தியதாகவேஏற்படுத்தப்பட்டுள்ளதனால் மக்களதுவாழ்க்கை முறையும்,விழுமியங்களும்,கலாசாரம்,பண்பாடு,நாகரிகம் என்பனஆலயத்தையொட்டியே தோற்றம் பெற்றுள்ளன.

### 3.2 ஆலய தொழும்பாளர் குடிகளின் வருகை

கோயில் திருப்பணிகளைநிறைவேற்றியகுளக்கோட்டமன்னன் கோயில் தொழும்புகளைச் செய்வதற்காக இந்தியாவிலுள்ளசோழநாட்டிலுள்ளமருங்கூர் சென்றுதானத்தார் எனப்படும் முப்பதுகுடிமக்களைஅழைத்துவந்தான்.இதனைகோணேசர் கல்வெட்டுஐந்தாம் பாடல் மேல்வருமாறு கூறுகின்றது. ‘‘….மருங்கூரிலேகிவளவரின் நல்லோரைமரக்கலத்தில் ஏற்றி..’’மேலும் வரிபத்தார் எனப்படும் இருபத்தொருகுடிகளைதொழும்புசெய்வதற்காககாரைக்காலில் இருந்துஅழைத்துவந்துகுடியேற்றினான்.இதனைகோணேசர் கல்வெட்டுபின்வருமாறு கூறிச்செல்கின்றது. ‘‘காரைவாய்ந்தவளநாடுசென்றுவரிப்பிடித்தான் மூவேழுகுடிவாழ்வோரை…’’தானத்தார்,வரிபத்தார்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

இவர்களிடையேபிணக்குஏற்பட்டால் அதனைதீர்த்துவைப்பதெற்கெனமதுரையிலிருந்துதனியுண்ணாப் பூபாலன் என்பவரைஅழைத்துவந்துதிருகோணமலைநகரத்தைஅரசாட்சிசெய்யும்படிநியமித்தான்.மேலும் ஆசாரிமார்கள்,காரளர்கள்,ஓதுவார் குடிகள் என்போரைஅழைத்துவந்துஅவர்களுக்குமானியங்களும் வழங்கிதொழும்புசெய்வதற்காகநியமித்தான்.தமிழ்நாட்டின் பலபகுதிகளிலிருந்துமக்களைஅழைத்துவந்துகோணேசர் கோயில் தொழும்புகளுக்காககோயிலைமையமாகக் கொண்டுஅவர்களைக் குடியமர்த்தினான்.சோழநாடுஎன்றுகோணேசர் கல்வெட்டுபொதுவாக கூறினாலும் பாண்டியநாட்டுக்குத்தலைநகராகியமதுரை,தொண்டைமண்டலத்துக் காஞ்சிபுரம் என்பனவும் குடியேற்றத்தில் சம்பந்தப்படுவதால் தமிழ்நாடுமுழுவதும் சோழர் ஆட்சியில் அடங்கியிருந்தசோழப் பேரரசர் காலத்திலேயே இந்தகுடியேற்றங்கள் நடந்திருக்கவேண்டும் (வேலுப்பிள்ளை, 2009:106).

பின் நாட்களில் கஜவாகுமன்னன் கோணேஸ்வரத்துக்குதிருப்பணிகள் செய்தகாலத்தில் சோழவளநாட்டிலிருந்துகொல்லன்,குயவன்,நாவிதன்,ஏகாலி,வள்ளுவன் போன்றகுடிகளில் இருந்துஐந்தைந்துகுடிகளைஅழைத்துவந்துகோணேஸ்வரஆலயத்திற்குதொழும்புசெய்வதற்காகநியமித்தான்.இவ்வாற ாக ஆலய தொழும்புகளைசெய்வதற்காககுடிகளைஅழைத்துவந்துகோணேஸ்வரஆலயத்தைசுற்றிதிருகோணமலைபிராந்தியத்தி ல் குடிகள் குடியமர்த்தப்பட்டனர் (வடிவேல், 1993:109).

குளக்கோட்டன் மூலமாகவேதிருகோணமலையில் வன்னிபங்கள் உருவாக்கம் பெற்றமை,அவர்களதுபணிகள் தொடர்பானசெய்திகள் கோணேசர் கல்வெட்டுப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வன்னிபங்களின் தோற்றம் கோணேசர் கோயிற் பரிபாலனத்தின் அம்சமானதென்பதுகோணேசர் கல்வெட்டின் கோட்பாடாகும்.கோயிலையும் அதன் சொத்துக்களையும் பரிபாலனம் செய்கின்றபொறுப்பும் கடமையும் திருகோணமலைவன்னியனாருக்குஉரியது(பத்மநாதன், 2018:42).குளக்கோட்டன் மூலமாகவேதிருகோணமலையில் வன்னிபங்கள் உருவாக்கம் பெற்றனர்என்றகருத்திற்குகோணேசர் கல்வெட்டுப் பாடல்கள்சான்றாகின்றன.திருகோணமலை,கட்டுக்குளம் ஆகியவிரண்டுபிரிவுகளுக்குமுரியவன்னிபங்களைக் குளக்கோட்டன் நியமித்தான் என்றுஞ்சொல்லப்படுகின்றது (பத்மநாதன்,2002:171).

வன்னிபங்களுக்குஆட்சிஅதிகாரம் வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கானநீதிமுறைகளும் வழங்கப்பட்டிருந்தன. கோயில் தொழும்பாளர்கள் குற்றம் செய்தால் வழங்கப்படவேண்டியதண்டனைகள்,பிராமணர்கள் குற்றம் செய்தால் தண்டனைவிலக்களிக்கப்படவேண்டியமை,ஏனையவர்கள் குற்றம் செய்தால் வழங்கப்படவேண்டியதண்டனைகள் என்பனபற்றியும் கோணேசர் கல்வெட்டில் சொல்லப்படுகின்றது. வன்னிபத்திற்குஅடுத்தபடியாகஆலயத் தொழும்பாளர்களில் முக்கியம் பெற்றவராக இருபாகைமுதன்மைகாணப்பட்டுள்ளார்.இருபாகைமுதன்மையென்பதுதலைமைக்குருவாவார்.இவரதுவீட்டில் நல்லது,கெட்டதுகள் நடந்தால் ஆலயத் தொழும்புக்கெனநியமிக்கப்பட்டவரிபத்தார்,தானத்தார் குடிகள் முதன்மைவீட்டில் கடமைகள் செய்யவேண்டும்.இவருக்குஅடுத்தநிலையில் ஒருபாகைமுதன்மைகாணப்படுகின்றார்.இருபாகைமுதன்மை,ஒருபாகைமுதன்மைஎன்பவர்கள் வெவ்வேறுகுலங்களைச் சேர்ந்தவர்கள்.இவர்களிடையேமணக்கலப்புஏற்படக்கூடாதுஎனகோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

தானத்தார் சோழமக்களில் நல்லொழுக்கமும் சீலமும் ஆசாரமும் நிறைந்தவர்கள்.இதனைகோணேசர் கல்வெட்டு“மருங்கூரில் வளவரில் நல்லோர்”என்றுகுறிப்பிட்டுள்ளது. வளவர் என்பதுசோழகுலத்தவர்களைகுறிக்கும் திருகோணமலைக்குவந்தவர்கள் வளவர்களுக்குள் தேர்ந்தெடுத்தநல்லோர் என்றுசிறப்பிக்கப்பட்டுள்ளனர்.இவர்கள் முப்பதுகுடிகளைசேர்ந்தவர்கள் சோழநாட்டில் மருங்கூரில் இருந்துபரம்பரையாகஆலயத்தொழும்புசெய்துவந்தவர்களாவர்.கோணேசர் கல்வெட்டுஐந்தாவதுபாடலில் “உரிமையிதுஉங்கள் பரவணியாமென்றேஉரைசெய்தான்”என்பதனால் மருங்கூரிலிருந்துகொண்டுவரப்பட்டமக்கள் பரம்பரையாகசிவத்தொழும்புகள் செய்யும் குடியிலிருந்துஅழைத்துவரப்பட்டார்கள் என்பதுஅந்தபரவணியைக் கோணேஸ்வரத்திலும் உரிமையோடுசெய்யும்படிமன்னன் வேண்டிக்கொண்டான் என்பதும் குறிப்பிடத்தக்கது (வடிவேல், 1993:54).

மேலும் தொழும்புகளைச் செய்வதற்காககாரைக்காலில் இருந்துவரிபத்தார் எனப்படும் இருபத்தொருகுடிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.இவர்கள் கோணேசப் பெருமானுக்குபல்வேறுதொழும்புகளைச் செய்வதற்காகநியமிக்கப்பட்டிருந்தனர்.வரிப்பத்தார் என்னும் பிரிவினரைப் பற்றிநான்குபாடல்கள் கோணேசர் கல்வெட்டிலேஉ‌ள்ளன.அவற்றிலேஅவர்களின் பூர்வீகம் பற்றியும் அவர்கள் வழமையாகச் செய்யும் கடமைகள் பற்றியும் விபரங்கள் உ‌ள்ளன.அவர்களின் பூர்வீகம் காரைக்காட்டுடன் தொடர்புடையது. அவர்கள் குளக்கோட்டனால் நியமிக்கப்பட்டவர்கள் (பத்மநாதன், 2002:181). செய்யும் தொழும்புகளுக்காகமானியங்களும் வழங்கப்பட்டதையும்வரிபத்தாரில் ஐவருக்குபண்டாரத்தார் எனும் பட்டம் வழங்கப்பட்டிருந்தமையையும் கோணேசர் கல்வெட்டின் பத்தாவதுபாடலில் உ‌ள்ளமேல்வரும்வரிகளில் இருந்துஅறிந்துகொள்ளலாம்.“நீர்பாயும் பள்ளவெளிநெல்விளையும் தரை அவர்களுக்குநிசமாய் ஈந்துபார்க்கரியஐங்குடிக்கும் பண்டாரத்தார் எனவேபவுஸீம் ஈந்து”

வன்னிமை,முதலிமை,தானத்தார்,வரிபத்தார் போன்றவர்கள் திருகோணமலையில் இருந்தமைக்கானசான்றாதாரமாகக் கங்குவேலிக் கல்வெட்டுகாணப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கதாகும்.கங்குவேலியில் உ‌ள்ளசாசனம் மலையில் வன்னியனாரும் ஏழூர் அடைப்பவர்களும் கோணைநாதனுக்குகொடுத்ததானம் ஒன்றைப் பற்றி கூறுகின்றது. கோணேசர் கல்வெட்டானது 17ஆம் நூற்றாண்டுகாலப்பகுதியில் தோற்றம் பெற்றதாகும்.கங்குவேலிகட்வெட்டானது 14ஆம் நூற்றாண்டுகாலப்பகுதியினதாகும்.இதன் அடிப்படையில் நோக்கும்போதுகோணேசர் கல்வெட்டில் சொல்லப்பட்டஅம்சங்கள் கோணேசர் கல்வெட்டின் தோற்றகாலத்திற்குமுன்னரேநடைமுறையில் இருந்ததுஎன்றுகருதலாம்.

குளக்கோட்டமன்னன் தானத்தாரில் மேலானகுடியில் உ‌ள்ளவர்களுக்குகருகுலக்கணக்குப் பதவியைபரம்பரையாகச் செய்துவரநியமித்தான்.இதனைகோணேசர் கல்வெட்டுஉ‌ரைநடைப்பகுதியில் கருகுலகணக்குபகுதியில் காணலாம்.“இரவிகுளகோட்டராசன் மருங்கூரார் கொண்டுவந்ததானத்தாரில் மேலானகுடியில் மனிதருக்குகருகுலகணக்குபரவணியாகக் கொடுத்தது” (வடிவேல், 1993:133). கோயிலுக்குவழங்கப்பட்டதானங்கள்,நாள்தோறும் கிடைக்கின்றவருமானம்,நித்திய,நைமித்தியகிரியைகளுக்கானசெலவுகளைஎழுதிவைப்பதற்காகபொன்னவராயன் குடிக்குகருகுலக்கணக்கர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. கோணேசர் கல்வெட்டில் நூற்றியெட்டுகருகுலக்கணக்கர்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளதுடன் இவர்களில் சிலருக்குப் முதலிப் பட்டமும் வழங்கப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

பாசுபதர்களேஆலயப் பூசகர்களாகநியமிக்கப்பட்டிருந்தனர்.இவர்கள் நியமிக்கப்பட்டமையானதுதிருக்கோணேஸ்வரத்தில் ஆதிபூசகர்கள் பிராமணர் அல்லாதநிலையைக் காட்டுகின்றது. சோழநாட்டுகுடிகளைக் கொண்டுவந்துகுடியேற்றிகோயிற் பணிகளுக்குஒழுங்குசெய்தவனாக கூறப்படும் குளக்கோட்டன் சோழியப்பிராமணரைக் கொண்டுவந்துகுடியேற்றிப் பூசகர்கள் ஆக்காமைகவனத்திற்குரியது(வேலுப்பிள்ளை, 2009:107).

கோணேசர் கல்வெட்டில் ஓதுவார் குடிகள் கோணைநாதனுக்குதொழும்புகள் செய்யநியமிக்கப்பட்டசெய்திகாணப்படுகின்றது.இதுகோணேசர் கல்வெட்டின் புலவன் வரவுப் பகுதியில் காணப்படுகின்றது.இவர்களுக்குதிருவாசகப் புலவன் எனும் பட்டம் அளித்து,பரம்பரையாகஆட்சிசெய்யபள்ளவெளியில் இரண்டவனநிலமும்,சம்பூரும் மானியமாகவழங்கியசெய்தியும் சொல்லப்படுகின்றது. குளக்கோட்டமன்னனால் திருநெல்வேலிசிவாலயத்திலிருந்து இறைவன் முன் காப்பணிந்துதிருவிழாநடாத்தஅழைத்துவரப்பட்டகாராளர் வம்சத்தைசேர்ந்தவர்களேகாப்புக்கட்டியார் தொழும்பாளர்கள்.இத்தொழும்பாளர்களுக்குவன்னிமைக்குசமமானமானியங்கள் வழங்கியதுடன் கோயில் தொடர்பானவிடயங்களில் முன்னீடும் முதன்மைஅதிகாரமும் பூபாலக்காட்டிலிருந்தபூபாலக்கோத்திரவன்னிபத்திற்குவழங்கப்பட்டிருந்தது. இவர்களுக்குகட்டுக்குளம்பற்றுஊராட்சியும் கொடுத்து,நிலாவெளிநிந்தவூருமாககொடுக்கப்பட்டது. இவர்களிடமேவளமையாகியபெரியபத்ததிகல்வெட்டுக்கணக்குவழங்கப்பட்டிருந்துள்ளது.



© 2025, IRJTSR

இவர்களின்இப்பொறுப்பானதுமருமக்கள் தாயமுறையினூடாகவேமாறவேண்டும் எனகோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

திருக்கோணேஸ்வரஆலயத்தில் தேவதாசிகள் நியமிக்கப்பட்டிருந்தசெய்திகளைகோணேசர் கல்வெட்டுதருகின்றது. இறைவன் முன் நடனம் ஆடுவதற்கெனபெண்கள் நியமிக்கப்பட்டிருந்துள்ளனர்.இதனைகோணேசர் கல்வெட்டில் ஆறாவதுபாடலில் நடனமாடும் பெண்கள் நியமிக்கப்பட்டசெய்திவருகின்றது. குளக்கோட்டுமன்னன் ஆலயத்தொழும்புக்காகஅழைத்துவந்ததானத்தார் குடியில் உள்ளபெண்களைநடனமாடநியமித்தான் எனவருகிறது. “அத்தர்முன்னர் ஆலாத்திநடனமிடல் பன்றிகுற்றல்” என்பதன் மூலம் நடனமாடப் பெண்கள் நியமிக்கப்பட்டசெய்திபுலப்படுகின்றது (வடிவேல், 1993:54). மேலும் கோணேசர் கல்வெட்டுஒன்பதாவதுபாடலில் நடனமாடும் பெண்களுக்கு இசைக்கருவிகளைவாசிக்கதொழும்பாளர்களைநியமித்தசெய்திசொல்லப்படுகின்றது. இந்தநடனமாதர்கள் தானத்தார் குடியைச் சேர்ந்தவர்களாவர்.இவர்கள் குற்றமிழைத்தால் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்களை இறைவனுக்குஅர்ப்பணித்ததுகாரணமாக இவர்கள் குற்றமிழைத்தால் வழங்கப்படும் தண்டனை ஏனைய பெண்களைவிடகுறைவாகக் காணப்பட்டுள்ளது.இதனைகோணேசர் கல்வெட்டு 13ஆவது பாடலில் காணலாம்.

சிற்பாசாரிகள் குடி தொடர்பாகவும் கோணேசர் கல்வெட்டில் காணப்படுகின்றது. இவர்களைகுளக்கோட்டமன்னன் அழைத்துவந்தான்.இவர்களேஆலயத்தைஅமைக்கும் திருப்பணிகளைச் செய்தனர்.இவர்கள் எக்காலத்திலும் இத்தொழும்பைபரம்பரையாகச் செய்துவரவேண்டும் என்றுநியமிக்கப்பட்டிருந்தனர்.தானத்தார் குடியைச் சேர்ந்தபெண்களைகுளக்கோட்டமன்னன் ஆலாத்திஎடுப்பதற்காகநியமித்திருந்தான்.பின்னர் வன்னிபமும், இருபாகைமுதன்மையும் சேர்ந்து ஏழு ஆலாத்திப் பெண்களைநியமித்திருந்தனர்.பரம்பரையாக இவர்களுடையவம்சத்திலேநடப்பிக்கவேண்டும் எனவும் கோணேசர் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளது. கயவாகுமன்னனும் தொழும்பாளர் குடிகளைகொண்டுவந்துதிருகோணமலையில் குடியமர்த்தினான்.அவர்களில் நாவிதன்,ஏகாலி,வள்ளுவன்,குயவன்,கொல்லன் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.இவர்கள் அனைவரும் வன்னிபம், இருபாகைமுதன்மை,தானம்,வரிபத்து இவர்கள் சொல்லும் கட்டளைப்படிநடக்கவேண்டும் எனகயபாகுமன்னன் நியமித்தான் (வடிவேல், 1993:128).கோணேசர் கல்வெட்டில் சொல்லப்படும் நடைமுறைகள் சோழர்களால் பின்பற்றப்பட்டநடைமுறைகளையொத்தவையாகும்.அதாவதுநிலதானங்கள் வழங்கப்பட்டமை,ஓதுவார்கள்,பிராமணர்கள்,நடனமாதர்கள் நியமனங்கள் என்பனசோழர்ளினுடையபண்பாடுகளைபிரதிபலிப்பதாகஉள்ளது. சோழர்கள் இலங்கையைபத்தாம் நூற்றாண்டில் ஆட்சியைகைப்பற்றினர் என்பதுகுறிப்பிடத்தக்கது. இதன் பின்னரேகோணேசர் கல்வெட்டுதோற்றம் பெற்றதனால் சோழர் நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது.

### 3.3 திருகோணமலைப் பிராந்தியமக்கள் செய்யவேண்டியதொழும்புகளும் பூசைவிதிமுறைகளும்

திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ளநான்குபற்றுக்களிலும் குளக்கோட்டமன்னன் மக்களைகுடியமர்த்திஅவர்கள் கோணைநாதனுக்குசெய்யவேண்டியதொழும்புகளையும் வகுத்திருந்தான்.இந்நான்குபற்றுக்களும் 19ஆம் நூற்றாண்டுகாலப்பகுதியிலும் நடைமுறையில் இருந்ததுஎன்பதைஆங்கிலேயஆவணங்களின் மூலமாகஅறிந்துகொள்ளலாம்.கொட்டியாரப்பற்றுமக்கள் கோணேசர் கோயிலுக்குபாக்கு,வெற்றிலை,வாழைப்பழம்,பால்,தயிர் என்பனவழங்கவேண்டும்.கட்டுக்குளம்பற்றிலுள்ளவர்கள் ஆறு அவணம் நெல்,பால்,தயிர்,நெய் வழங்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.இதனைகோணேசர் கல்வெட்டு15, 17ஆவது பாடல்கள் விளக்குகின்றன. இவர்கள் தொழும்புசெய்வதற்காகநிலமானியங்களும் வழங்கப்பட்டிருந்தன. மேலும் ஒல்லாந்தஆளுனர் பான் செண்டன்,பிரித்தானியபிரதமநீதியரசர் அலெக்ஷாண்டர் ஜோன்ஸ்டன் ஆகியோரின் குறிப்புக்களிலும் நிலங்களில் இருந்துகிடைத்தவிளைச்சலில் கோணைநாதருக்குபத்திலொருபங்குகொடுக்கப்பட்டசெய்தியும் சொல்லப்படுகின்றது (பத்மநாதன்,2002:195). கோணேசர் கல்வெட்டில் கோணைநாதனுக்குபூசைசெய்யவேண்டியவிதிமுறைகள்,படைக்கப்படவேண்டியநைவேத்தியங்கள்,நைவேத்தியபடைக் கப்படவேண்டியமுறைகள் கூறப்பட்டுள்ளதுடன்,பூசைகள் விதிதவறிநடந்தால் ஏற்படும் ஆபத்துக்களும் கூறப்பட்டுள்ளது. மேலும்



© 2025, IRJTSR 

திருச்சூகரவேட்டைசெய்யவேண்டியவிதிமுறைகள்,கந்தளாய்க்குளவேள்விசெய்யவேண்டியவிதிமுறை,பலியிடல் சடங்குஎன்பனபற்றியவிரிவானதகவல்களைச் கூறிச் செல்கின்றது.

### 3.4 குளக்கோட்டனால் நியமிக்கப்பட்டதொழும்புகளினதும் தொழும்பாளர்களினதும் இன்றையநிலை

கோணேசர் கல்வெட்டில் சொல்லப்பட்டஅனைத்துவிடயங்களும் எக்காலத்திலும் பின்பற்றப்படவேண்டும் என்றேசொல்லப்படுகின்றது. ஆனால்இவைதற்போதுமாற்றமடைந்துள்ளது. கோணேசர் ஆலயத்தில் கோணேசர் கல்வெட்டில் சொல்லப்பட்டதுபோன்றுபங்குனிஉத்தரதிருவிழாவும்,பங்குனிஉத்தரதிருவிழாவில் 16, 17, 18ஆம் பூசைகளில் சிலதொழும்பாளர்கள் வந்துதங்களுடையகடமைகளைச் செய்வார்கள்.ஆனால் அவர்கள் கோணேசர் ஆலயத்திற்குதொழும்புசெய்வதற்கென்றுகுடியாக இல்லை. கோணேசர் கல்வெட்டில் சொல்லப்படும் மரபுகள் பேணப்படவேண்டும் என்பதற்காக இதனைசெய்துவருகிறார்கள்.மேலும் இவர்களுக்குஆலயத்தினால் சிறுகொடுப்பனவுவழங்கப்படும்.தற்போதுகோணேசர் ஆலயம் தொடர்பானஅனைத்துஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகசபையினரேசெய்துவருகின்றனர்.பட்டுநேர்தல் சடங்கின் ஆரம்பபூசையுமே இங்கு இடம்பெறுகின்றது (நேர்காணல் சிவணேசராஜா,வயது 57,திருகோணமலை).

குளக்கோட்டுமன்னனால் திட்டம் பண்ணப்பட்டஒருபத்ததியின் படிதற்காலத்திலுள்ளவர்களும் செய்துவருகின்றார்கள்.மழையோ,வெயிலோதேவைப்படும் காலங்களிற் பட்டுநேர்கடன் செய்கின்றவழக்கம் இப்பொழுதும் இருந்துவருகின்றது. நான்குபற்றுக்களிள் உள்ளவர்கள் கோணேஸ்வரத்திற்குவந்துபட்டுக்கட்டிநேர்கடன் செய்வார்கள் எனகோணேசர் கல்வெட்டின் பொழிப்புரையைஎழுதியவடிவேல் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.ஆகவேஆரம்பத்தில் இருந்து இந்தநடைமுறைபின்பற்றப்பட்டுவந்துள்ளதுஎன்றுகருதலாம்.

கோணேசர் கல்வெட்டில் நான்குபற்றுக்களில் உள்ளமக்களும் தொழும்புகள் செய்யவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுஅந்ததொழும்புகள் எல்லாம் மருவிப்போய்விட்டது. தற்போது இதனைப் பிரதிபலிக்கும் வகையில் ஒவ்வொருபற்றிலிருந்தும் இரண்டுநிர்வாக சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.திருக்கோணேஸ்வரஆலயத்திற்குவழங்கப்பட்டமானியமாகதற்போதுஎட்டுஏக்கர் நிலமேகாணப்படுகின்றது. இந்நிலமானதுநிலாவெளிமாரியம்மன் ஆலயத்திற்குவழங்கப்பட்டது. அந்தமானியத்தில் மூன்றில் இரண்டுபங்குநிலாவெளிமாரியம்மன் ஆலயத்திற்கும் மூன்றில் ஒருபங்குகோணேசர் ஆலயத்திற்கெனவும் வழங்கப்பட்டுள்ளது. தற்போதுகோணேசர் கல்வெட்டில் சொல்லப்பட்டவைதிருக்கோணேஸ்வரர் கோயிலிலிருந்துகாலப்போக்கில் மக்களின் கலாசாரமாற்றங்களினால் மருவிச் சென்றுவிட்டன (சிவணேசராஜா,வயது 56,திருகோணமலை).

இவைதற்போதுதம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்திலேபின்பற்றப்பட்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது. கி.பி 1624ஆம் ஆண்டுகோணேசர் ஆலயத்தைபோர்த்துக்கீசர் இடித்துஅழித்தனர்.அந்தஆலயத்தில் இருந்தவிக்கிரகங்கள், ஆலய சொத்துக்களைஎல்லாம் நிலத்திலும்,கிணற்றிலும் மறைத்துவைத்தார்கள்.பிராமணர்கள்,ஆலயத்தொழும்பாளர்கள் பிரதானமானசிலையைஎடுத்துச்சென்றுகழனிமலையில் வைத்துவழிபட்டனர்.பின்னர் அச்சிலையைதம்பலகாமம் கொண்டுசென்றுஆலயம் அமைத்துவழிபட்டனர்.இதனைநிரூபிக்கும் வகையில் ஒல்லாந்தஆளுனர் பான் செண்டன் (Van senden) என்பவரின் குறிப்புகாணப்படுகின்றது (பத்மநாதன், 2022:117). கோணேசர் ஆலய விக்கிரகங்கள் தம்பலகாமத்தில் வைத்துவழிபடப்பட்டதனால் அங்குவாழ்ந்ததொழும்பாளர்கள் கோயிற் தொழும்புகளையும்,குடிமக்கள் தொழும்புகளையும் தம்பலகாமத்திலேசெய்துவந்தனர் (வடிவேல், 1993:43). இதன் பின்னர் ஆலயத்தொழும்பாளர்கள் விக்கிரகங்களைஎடுத்துச் சென்றுதம்பலகாமத்தில் வைத்துவழிபட்டுவந்ததுடன்,தம்பலகாமத்திலேதொழும்பாளர்களும் குடியிருந்துவிட்டமையால் இன்றுவரைதொழும்புகள் தம்பலகாமஆதிகோணநாயகர் ஆலயத்திலேபின்பற்றப்பட்டுவருவதுடன் சிலதொழும்புகள் மருவிப் போயுள்ளது. தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் தற்போதும் பட்டுநேர்தல் சடங்கு,மகாவேள்விஎன்பன இன்றும் நடைமுறையிலுள்ளன.

கோணேசர் கல்வெட்டில் வரும் வன்னிபம், இருபாகைமுதன்மைக் குருக்கள் போன்றோர் காலனித்துவத்தின் வருகையோடுமருவிப்போய்விட்டனர்.இதனால் இவர்களுக்குகீழ் பணியாற்றியவரிபத்தார்,தானத்தார் குடிகள்

தற்போதுமுறையேவைராவியார்,காரியப்பர் எனஅழைக்கப்பட்டுஆலயத்தில் மேலானதொழும்பில் பணியாற்றுகின்றனர்.தற்போதுவைராவியார் குடியினரிடமேஆலயத்தின் சாவிவழங்கப்பட்டுள்ளது. வைராவியாருக்குஅடுத்தபடியாகவேகாரியப்பர் காணப்படுகின்றார்.இந்தகாரியப்பர் கங்காணம்,அடப்பன் போன்றதொழும்பாளர்களைதனக்குக் கீழ் நியமித்துள்ளார் (நேர்காணல் :துறைநாயகம்,வயது 78).

நடனமாதர் தொழும்பானதுதற்போதையகாலகட்டத்தில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் நடைமுறையில் காணப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கது. இந்தநடனமாதர் தொழும்பானதுபரம்பரையாககடைப்பிடிக்கப்படுகின்றது. தற்போது இறைவன் முன் நடனமாடுவதில்லைமாறாககைகாட்டிதொழும்புசெய்யப்படுகின்றது. கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் காப்புக்கட்டியார் தொழும்புதற்போதும் பின்பற்றப்படுகின்றபோதும் தொழும்புமுறையில் சிலமாற்றங்கள் நிகழ்ந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

புலவன் தொழும்பும் இங்குகாணப்படுவதுடன் திருவிழாக் காலங்களிலேஅவர் தனதுதொழும்புகளைச் செய்வார்.மாலைகட்டும் தொழும்பாளர்,மண்ணுடையான் தொழும்பாளர்,ராஜமேளகாரர், ஆசாரித் தொழும்பாளர் போன்றோர் பரம்பரையாகதங்களுடையதொழும்புகளைச் செய்துவந்தாலும் தற்போது இவர்கள் தங்கள் தொழும்புகளைதிருவிழாக்காலங்களில் மாத்திரமேசெய்துவருகின்றனர்.கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதொழும்பாளர்கள் சிலதங்களுடையதொழும்புகளைச்செய்துவருகின்றனர் (நேர்காணல் :தெய்வேந்திரன்,வயது 57).இருந்தும் இவர்கள் தம்பலகாமத்திலிருந்தும்,திருகோணமலையிலிருந்தும் குடிபெயர்ந்துவேறு ஊர்,மாவட்டம்,நாடுஎனகுடியேறிவிட்டமையால் அவர்களைச் சந்தித்துதொழும்புகள் தொடர்பானமுழுமையானதகவல்களைத் திரட்டமுடியவில்லை.

மேலும் இத்தொழும்பாளர்களுக்குநிலமானியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆலயத்திற்கும் பலசொத்துக்கள் காணப்படுகின்றன. ஆலயத்திற்குவழங்கப்பட்டநிலமானியங்கள்,சொத்துக்கள் தொடர்பானஆவணங்களில் இருந்தும் அவற்றைஎன்னிடம் களவாய்வின் போதுகாட்டுவதற்கு ஆலய நிர்வாகசபையோ,தொழும்பாளர்களோவிரும்பவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. கோணேசர் கல்வெட்டில் ஒவ்வொருபற்றிலிருந்தும் சிலபூசைக்கானபொருட்கள் வழங்கப்பட்டதுஎன்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுஒவ்வொருபற்றையும் பிரதிபலிக்கும் வகையில் நிர்வாகஉறுப்பினர்களேதேர்ந்தெடுக்கப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கது. கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளவேள்விகள்,சிலபூசைநடைமுறைகள் என்பனவும் தற்போதும் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் பின்பற்றப்படுகின்றன.

### 4.0 கோணேசர் கல்வெட்டுகாட்டும் பொதுவானபண்பாட்டுஅம்சங்கள்

கோணேசர்கல்வெட்டுதிருக்கோணேஸ்வரஆலயத்திற்குகுளக்கோட்டமன்னன் செய்ததிருப்பணிகள்,ஆலயத்திற்கெனநியமிக்கப்பட்டதொழும்பாளர்கள்,தொழும்புகள் எனஆலயத்தோடுதொடர்புடையபண்பாட்டுஅம்சங்களேசொல்லப்பட்டுள்ளன. இருந்தும் கோணேசர் கல்வெட்டில் சிலசமூகத்தோடுதொடர்புடையபொதுவானபண்பாட்டுஅம்சங்களும் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 4.1 திருகோணமலைப் பிராந்தியமும் ஆட்சி முறையும்

இலங்கைவரலாற்றிலேபன்னிரெண்டாம் நூற்றாண்டுமுதலாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரைவன்னிமைகள் என்னும் சிற்றரசுகள் குறிப்பிடத்தக்கமுக்கியத்துவத்தைப் பெறுகின்றன.போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் எழுதியவரலாற்று நூல்களிலும் நிர்வாகஅறிக்கைகளிலும் இவை பற்றிக் காணப்படும் குறிப்புக்களும் விவரங்களும் அநேகம் தமிழ்,சிங்கள,பாளிமொழிகளில் எழுதப் பெற்ற நூல்களைவிடவன்னிமைகள் பற்றியசெய்திகள் கோணேசர் கல்வெட்டிலேமிகக் கூடுதலாகக் காணப்படுகின்றன (பத்மநாதன், 2004:33).

கோணேசர் கல்வெட்டில் வன்னிமையின் உற்பத்தி,வன்னிபம் பேணவேண்டியஒழுக்கநெறி,நீதிபரிபாலனத் துறையில் வன்னிபத்திற்குரியஅதிகாரம் கோணைநாதர் கோயில் தொடர்பாகவன்னிபத்திற்குரியகடமைகள் ஆகியநான்குவிடயங்களைப்பற்றிகோணேசர் கல்வெட்டின் 11, 12, 13, 14, 15ஆம் பாடல்களில் கூறப்படுகின்றன.

திருகோணமலைப் பிராந்தியத்தில் முற்காலங்களில் வன்னியரின் ஆட்சியின் கீழமைந்தநான்குகுறுநிலப்பிரிவுகள் இருந்தன. கோணேசர் கல்வெட்டில் இந்நான்குபிரிவுகளிலும் ஆட்சிபுரிந்தவன்னிபங்களின் பெயர்கள் அடங்கியுள்ளன. கோணேசர் கல்வெட்டில் உரைநடைப் பகுதியில் வன்னிபம் வரவு,காரைநகரால் வந்தவன்னிபம்,சோழநாட்டுவன்னிபம்,மருங்கூர் வன்னிபம் என்றபகுதிகளிலேவன்னிபங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாம், இரண்டாம், மூன்றாம்,நான்காம் பிரிவுகளில் முறையே 32, 37, 31, 47 என்றஎண்ணிக்கையில் வன்னிபங்களின் பெயர்கள் உள்ளன. திருகோணமலைப் பிராந்தியத்திலமைந்தநான்குவன்னிமைப் பிரிவுகளுக்குத் தலைவர்களாகவிளங்கியவெவ்வேறுவம்சங்களைச் சேர்ந்தவன்னிபங்களின் பெயர்பட்டியல்ளாகவேஅவைகொள்ளத்தக்கவை (பத்மநாதன், 2002:171).

திருகோணமலைவன்னிபம் பற்றிக் கோணேசர் கல்வெட்டிலுள்ளசிலசெய்திகள் கங்குவேலிக் கல்வெட்டின் மூலம் உறுதியாகின்றது.திருகோணமலை,கட்டுக்குளம்பற்று,தம்பலகாமம்பற்று,கொட்டியாரம்பற்றுஎனும் நான்குவன்னிப்பிரிவுகளுக்கும் வன்னியர் எனும் பட்டம் பெற்றசிற்றரசர்கள் அதிபராய் இருந்தனர்.பிற்பட்டகாலங்களிலும் குறிப்பாகபிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் திருகோணமலைமாவட்டத்தில் நான்குவன்னியர்களும் அதிகாரிகளாக இருந்தமைக்குசான்றாக 1936ஆம் ஆண்டில் ரி.சரவணமுத்து,ஏ.கனகசிங்கம்,எம்.இராசையா,ரி.சங்கரப்பிள்ளைஎன்போர் முறையேதிருகோணமலைநகரம்,தம்பலகாமம்,கட்டுக்குளம்,கொட்டியாரம் எனும் பிரிவுகளில் வன்னிபங்களாகக் கடமைபுரிந்தனர் எனபான் செண்டனின் குறிப்புக்களில் உள்ளன. இருந்தும் திருகோணமலைப் பிராந்தியத்தில் தற்காலத்தில் வன்னிமைகளைப் பிரதிபலிப்பதாகவன்னியர் தெருஎன்னும் ஒருஅடையாளம் மட்டுமேகாணப்படுகின்றது. சாதாரணமக்களுக்குவன்னியர்கள்,அவர்களின் ஆட்சிகள் தொடர்பானஎந்தவொருவிடயமும் தெரியவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

### 4.2 திருகோணமலைசமூகஅமைப்பு

திருகோணமலைப் பிராந்தியத்தில் அக்காலப்பகுதியில் காணப்பட்டநிலத்தைஅடிப்படையாகக் கொண்டநிலமானியசமூகக் கட்டமைப்புஆலயத்திற்கும்,தொழும்பாளர்களுக்கும் வழங்கப்பட்டநிலமானியத்தின் மூலமாகவெளிக்காட்டப்படுகின்றது. கந்தளாயில் 2700 அவணவிதைநெல் விதைக்கக் கூடியநிலத்தைதானம் கொடுத்தசெய்தியையும் கோணேசர் கல்வெட்டுத் தருகின்றது. “தானிரண்டாயிரத் தெழுநூறுஅவணவிதைப்புத் தறையைத் தான் செய்வித்து” இவ்வாறாகஆலயத்திற்கெனதானம் வழங்கப்பட்டநிலங்களின் மூலமாகமக்களும் தங்கள் பொருளாதாரத் தேவைகளைநிறைவேற்றிக் கொண்டனர்.இதன் அடிப்படையில் திருகோணமலைப் பிராந்தியத்தில் நிலத்தைஅடிப்படையாகக் கொண்டகோணேசர் கோயிலைமையப்படுத்தியநிலமானியசமூகக் கட்டமைப்புகாணப்பட்டதுஎனலாம் (சரவணபவன், 2014:169).

குளக்கோட்டுமன்னன் கோயில் தொழும்புசெய்வதற்காகவரிபத்தார் என்னும் குடிகளுக்குநீர்ப்பாய்ச்சலுள்ளபள்ளவெளிஎனப்படும் இடத்திலுள்ளநெல்விளையும் வயல்களைமானியமாககொடுத்தான்.“நீர்பாயும் பள்ளவெளிநெல்விளையும் தரை அவர்க்குநிசமாய் ஈந்து”எனும் வரியின் வாயிலாகவரிபத்தாருக்குவழங்கப்பட்டநிலமானியத்தைஅறிந்துகொள்ளலாம்.தம்பலகாமம் ஆலயம்,திருக்கோணேஸ்வரஆலயம்,தொழும்பாளர்கள் போன்றோருக்குவன்னிமைகளால் வழங்கப்பட்டஆவணங்கள் அவர்களிடம் காணப்பட்டாலும் அவற்றைஅவர்கள் வெளிப்படுத்தவிரும்பவில்லை. சமூகத்தில் காணப்பட்டபொருளாதாரநடவடிக்கைகளானவிசவாயம்,கால்நடைவளர்ப்பு,கடற்தொழில்,சுங்கவரிகள் என்பனவும்,கொல்லன்,குயவன்,துணிநெய்தல் போன்றசிறுதொழில் பற்றியகுறிப்புக்களும் கூறப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.விவசாயம் சிறப்புற்றுவிளங்கியுள்ளது. குளக்கோட்டுமன்னன் இரண்டாயிரத்துஎழுநூறுஅவணம் நெல்லைவிதைப்பதற்குத் தேவையானவிளைநிலத்தைஉண்டாக்கிவழங்கினான்.பிரித்தானியர் காலத்திலும் திருகோணமலை,தமபலகாமம் பற்று,கட்டுக்குளம் பற்று,கொட்டியாரம்பற்றுஎன்பவற்றில் விவசாயச்செய்கைமேற்கொள்ளப்பட்டமைக்கு 1924, 1921, 1931, 1932, 1933,1936, 1937ஆம் ஆண்டுபிரித்தானியநீலப்புத்தகஅறிக்கையில் உரங்கள் வழங்கப்பட்டமைக்கானதகவல்கள் காணப்படுகின்றன.



© 2025, IRJTSR 

திருகோணமலைச் சமூகத்தில் பாதிப்பைஏற்படுத்தியிருந்தசாதிக் கட்டமைப்புபற்றியும் கோணேசர் கல்வெட்டு மூலமாகஅறிந்துகொள்ளமுடிகின்றது.இந்தியாவில் காணப்பட்டதுபோன்றசாதிப்பிரிவுகள் திருகோணமலைபிராந்தியத்தில் காணப்படவில்லை. குறிப்பாக இந்தியச்சாதிஒழுங்குநிரலில் அதிகாரமுடையவர்களாக இருந்தபிராமணர்கள் திருகோணமலையில் குளக்கோட்டன் காலத்தில் முதன்மைபெற்றிருந்ததற்கானசாத்தியங்கள் குறைவே. இங்குவேளாளர் என்னும் நிலவுடைமையாளர்களேமுக்கியம் பெற்றிருந்தார்கள்.விவசாயிகள் இந்துக்களாகவும்,தென்னிந்திய இந்துநெறிகளோடுநெருக்கமானஉறவைக் கொண்டிருந்ததாலும் சாதியம் திருகோணமலைச் சமூகத்தின் அடிப்படைக் கட்டுமாணத்தின் அச்சாணியாக இருந்தது (சரவணபவன், 2003:207).

சமூகத்தில் சாதியம் கடுமையாகபேணப்பட்டுள்ளது. இங்குதானத்தார்,வரிபத்தார்,காராளர்,புலவர்,ஆசாரிஎனஉயர் சாதியினரும்,ஏகாலி,வள்ளுவன்,குயவன் போன்றகீழ் சாதியினரும் காணப்பட்டுள்ளனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. திருமணம் முதல் மரணம் வரைசாதிக் கட்டமைப்பேஅனுசரிக்கப்பட்டுவந்துள்ளது. தற்போதுள்ளஆதிகோணநாயகர் ஆலய தொழும்பாளர்களிடமும் இந்தசாதிக் கட்டமைப்பானதுமிக இறுக்கமாகவேகடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது. கோணேசர் கல்வெட்டில் சமூகத்தில் காணப்பட்டமரணச் சடங்கு,திருமணச் சடங்குபற்றியவிபரணங்களும் காணப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கதாகும்.இதில் சொல்லப்படும் சடங்குமுறைகளேதற்போதும் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

**5. முடிவுரை**

கோணேசர் கல்வெட்டானதுவரலாற்றுச் செய்திகளைஅடிப்படையாகக் கொண்டுகோணேசர் கோயிலுக்குசெய்யப்பட்டதிருப்பணிகள்,தொழும்புக்காகநியமிக்கப்பட்டதொழும்பாளர்கள்,அவர்களுடையகடமைகள்,பொறுப்புக்கள் என்பவற்றைச் விபரிப்பதன் மூலமாகமத்தியகாலபண்பாடுகளைவெளிக்காட்டுகின்றது.காலவோட்டத்தின் காரணமாகவும்,கல்விஅறிவின் வளர்ச்சியினாலும்,பெரும் உத்தியோகங்களில் தொழும்பாளர்கள் பணிபுரிவதனாலும்,வேறுநாடுகளுக்குதொழும்பாளர் குடிகள் குடிபெயர்ந்துசென்றுவிட்டதனாலும் தற்போது இத்தொழும்புகள் மருவிப்போகின்றநிலையில் காணப்படுவதுடன் சிலதொழும்புகள் மருவியும் போய்விட்டதுஎனலாம்.மேலும் தம் சந்ததியினர் இன்னும் இத்தொழும்புகளைசெய்துவருவதற்குவிரும்பாமையினாலும், இவர்கள் பரம்பரையில் காணப்படும் போட்டி,பொறாமைகாரணமாகவும்,ஆலயத்தில் காணப்படும் வழிபாட்டுமுறைகளை,தொழும்பாளர் நடைமுறைகளைகுறிப்பிடும் முறையானஆவணங்கள்,முறைப்படுத்தல்கள் கிடைக்காமையால் இத்தொழும்புகள் தொடர்பானபுரிதல் காலவோட்டத்தில் அடுத்தசந்ததிக்குகடத்தப்படும் நிலைசந்தேகத்திற்குரியதாகியுள்ளது. மேலும் அவர்களுடையதொழும்புநடைமுறைகள்,சமுதாயவழமைகள் என்பவற்றைஅவர்கள் வெளிப்படுத்தவிரும்பாமையே இத்தொழும்புகள் அவர்களுடையபண்பாடுகள் சிறிதுசிறிதாகமருவிச் செல்வதற்குகாரணமாகஉள்ளதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

சோழர் ஆட்சிக் காலத்தில் இப்பிராந்தியத்தில் ஆதிகாலகல்வெட்டுக்கள் கிடைக்கப்பெற்றன. இக்கல்வெட்டுக்கள் ஊடாகதமிழ்ப் பிராந்தியத்தில் சோழர் செல்வாக்கு இடம்பெற்றதைஅறியமுடிகின்றது. இவற்றின் தொடர்ச்சியாகசிலபண்பாட்டுக் கூறுகள் இப்பிராந்தியத்தில் இன்றுவரைகாணப்படுகின்றது. இச்செய்தியைஎடுத்துரைக்கும் நூலாககோணேசர் கல்வெட்டுப் பாடல் அமைகின்றது. கோணேசர் கல்வெட்டுப் பாடலானதுதிருகோணமலைப் பிராந்தியத்தின் மத்தியகாலபண்பாட்டுஅம்சங்களைவெளிப்படுத்தும் ஓர் இலக்கியமாககாணப்படுகின்றது. இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்படும் போது இடைச்செருகல்கள் இடம்பெறுவது இயல்பாகும்.கோணேசர் கல்வெட்டுப் பாடலில் இத்தன்மைகாணப்பட்டாலும் பண்பாட்டுவிடயங்களில் பிற்சேர்க்கைகள் இணைக்கப்படாமைகுறிப்பிடத்தக்கது.

கோணேசர் கல்வெட்டுப் பாடல் பௌராணிகபாணியிலாகவரலாற்றைச் கூறிச் செல்வதனாலும் கோணேசர் கல்வெட்டில் சொல்லப்பட்டஅனைத்துஅம்சங்களையும் நிரூபிக்கும் வகையில் சான்றாதாரங்கள் காணப்படாமையும் நோக்கத்தக்கது. இதற்குபிற்பட்டகாலத்தில் ஏற்பட்டகாலனித்துவஆட்சியால்



© 2025, IRJTSR 

இப்பிராந்தியத்திலுள்ளபண்பாட்டுவிடயங்கள் அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. கோணேசர் கல்வெட்டுப் பாடல் பௌராணிகத் தன்மையைதவிர்த்துவரலாற்றைஅறியும் மூல நூலாகக் கருதலாம்.

### உசாத்துணை

[1] Pathmanathan.S., The Laws and Customs of the Tamils of Trincomalee, New Century Book House, Ambattur.

[2] அகிலேசப்பிள்ளை.வே., (1950),திருக்கோணசலவைபவம்,சோதிடப்பிரகாசயந்திரசாலை.

[3] சரவணபவன்.க., (2003),வரலாற்றுத் திருகோணமலை,திருகோணமலைவெளியீட்டாளர்கள்.

[4] சரவணபவன்.க., (2010),காலனித்துவதிருகோணமலை,திருகோணமலைவெளியீட்டாளர்கள்.

[5] சரவணபவன்.க., (2014), இதுகுளக்கோட்டன் சமூகம்,திருகோணமலைவெளியீட்டாளர்கள்.

[6] சோமஸ்கந்தர்.வை., (1996),திருக்கோணேஸ்வரம்,ஆலடிவிநாயகர் தேவஸ்தானம்,திருகோணமலை.

[7] தங்கேஸ்வரி.க., (1993),ஈழமன்னன் குளக்கோட்டனின் சமயசமுதாயப் பணிகள்,மணிமேகலைப் பிரசுரம்,சென்னை.

[8] தங்கேஸ்வரி.க., (1993),குளக்கோட்டன் தரிசனம்,அன்புவெளியீடு,ஆரையம்பதி,காத்தான்குடி.

[9] தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் திருக்குடமுழுக்கு மலர், (2015),தம்பலகாமம் ஆதிகோணநாயகர் தேவஸ்தானம்.

[10] நடராசா.க.செ., (1982),ஈழத்துத் தமிழ் இலக்கியவளர்ச்சி,கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

[11] பத்மநாதன்.சி., (2002), இலங்கையில் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும்,குமரன் புத்தக இல்லம்,கொழும்பு.

[12] பத்மநாதன்.சி., (2003), இலங்கையில் வன்னியர்,குமரன் புத்தக இல்லம்,கொழும்பு.

[13] பத்மநாதன்.சி., (2004),ஈழத்து இலக்கியமும் வரலாறும்,குமரன் புத்தக இல்லம்,கொழும்பு.

### நேர்காணல்

[1] கைலாயம்.தெ,ஆதிகோணநாயகர் ஆலய துணைவைராவியார்,தம்பலகாமம்,வயது– 67

[2] சிவணேசராஜா,திருகோணேஸ்வர ஆலய பரிபாலனசபைஉறுப்பினர் - சம்பூர்,வயது– 56

[3] சம்பத்குமார்,தம்பலகாம ஆலய பரிபாலன சபை உறுப்பினர் - தம்பலகாமம்.,வயது– 56

[4] துரைநாயகம்,ஆதிகோணநாயகர் ஆலய பிரதானவைராவியார் - தம்பலகாமம்,.வயது– 77